**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 135/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சுப்புலெட்சுமி)**
**28.08.2024**

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

சாமிநாதபிள்ளை அழகம்மாளுக்கு நான் 3வது பிள்ளை. வழக்கு தாக்கல் செய்வதற்கு நான்தான் விவரம் சொன்னேன். 1ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் எனது தம்பி உறவு முறை. 1ம் பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என படித்து பார்த்தேனா படித்து பார்த்தேன். எனது அப்பா சாமிநாதபிள்ளை 03.09.1986ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மூத்த சகோதரி நாகலெட்சுமி என்ற நாகம்மாள் 2021ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் 2001ல் இறந்தார் என்றால் சரிதான். எனது மூத்த சகோதரி காமாட்சி இறந்து 3 வருடங்கள் ஆகிறது. நாகலெட்சுமிக்கு வாரிசு இல்லை. அவரது கணவர் 1976 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாகலெட்சுமியின் கணவர் முத்துப்பிள்ளைக்கு சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அவருக்கு 40 ஏக்கர் நிலங்கள் இருந்தது. அந்த சொத்து குடுமியான்மலை அருகில் இலுப்பவயல் கிராமத்தில் இருந்தது. எனக்கு திருமணம் 1977ல் நடந்தது. எனது கணவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடந்தபோது திருச்சி சுப்பிரமணியபுரத்தில் எனது கணவருடன் வாடகை வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். 1986ம் வருடத்தில் திருச்சி சோழன் நகரில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். அரசாங்கத்தால் எனது கணவருக்கு வீடு கொடுக்கப்பட்டது. வீட்டிற்கான கிரைய தொகையை எனது கணவரின் சம்பளத்தில் பிடித்துக்கொண்டார்கள். எதிர்வழக்குரைக்கு பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் திருப்பதி செட்டியாருக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தாகும். யாரிடம் இருந்து எனது தகப்பனார் வாங்கினார் என்றால் கைவேலிப்பட்டி காடுவெட்டியார் என்பவரிடம் வாங்கினார். எந்த வருடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் கிரையம் வாங்கியதற்கான பத்திரம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாரால் கிரையம் வாங்கப்படவில்லை என்றும் கிரையம் வாங்கியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து திருப்பதி செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் எனது தகப்பனார் தரை வாடகைக்கு பெற்று குடிசை வீடு போட்டு கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டி வசித்து வந்தோம். திருப்பதி செட்டியாரிடம் வாங்கியதாக ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதகம் என்பதால் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தகப்பனார் அனுபவம் செய்து வந்தார் என காட்டுவதற்கு வீட்டு வரி ரசீதோ மின் கட்டண ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரையத்திற்கு பின்னிட்டு

எனது தகப்பனார் பெயரில் பட்டா எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1986ற்கு பிறகு கூட்டு அனுபவத்தில் தாவா சொத்து இருந்தது என்பதற்கு எனது பெயரிலோ எனது சகோதரிகள் பெயரிலோ கூட்டு பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1990ம் வருடம் 1ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை எதிர்த்து நானோ எனது சகோதரிகளோ வருவாய் நீதிமன்றத்தில் எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1986ல் எனது தகப்பனார் இறந்தபிறகு சொத்தை பிரித்துக்கேட்டு 2000ம் ஆண்டு வரை எவ்வித சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நடுவில் தார்சு வீடும், முன்புறமும், பின்புறமும் ஆஸ்பெட்டாஸ் சீட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் வரி விதிப்பு மற்றும் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும் வரி விதிப்பு வழங்கக்கூடாது என்று ஊராட்சி மன்றத்தில் நாங்கள் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் எத்தனை ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் கடந்த 3 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை.

(1ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)